[3rd April 1965

திரு. எஸ். ஜே. ராமசாமி: தனியார் பள்ளிகளில் ஏறக்குறைய இம்மாதிரியான புகார்கள் நிறைய வந்திருக்கின்றன. சம்பளம் கூடக் கொடுக்கவில்லை என்ற புகார் வந்திருக்கிறது. அப்படி யிருந்தும் தனியார் பள்ளிகளை, கிராண்டு கொடுக்கும் தனியார் பள்ளிகளை அரசாங்கமே ஏன் எடுத்து நடத்தக் கூடாது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், பஞ்சாயத்து யூனியன்கள் பற்றித்தான் அதிகமாகப் புகார்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆரம்பப்பள்ளிகளில் குழந்தைகளுக்கான நூல் நிலையங்கள்

* 420 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து :
திரு. கே. ஏ. மதியழகன் : } கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகளுக்கான நூல் நிலையங்கள் அமைப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Provision has been made for matching funds for providing libraries in 1,000 higher elementary schools and 4,400 lower elementary schools including basic schools in each year of the III Plan.

திரு. எஸ். ஜே. ராமசாமி: எஜுகேஷன் டைரக்டர் ஆபீசில் நான் பார்த்திருக்கிறேன். படக்காட்சி, நூல் நிலையங்கள் போன்றவை அங்கே இருக்கின்றன. அதேபோல மாவட்டங்கள் தோறும் வைக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தக் கேள்வி நூலகத்தைப் பற்றியது, படக் காட்சியைப் பற்றியது அல்ல.

புலவர் கா. கோவிந்தன்: ஒவ்வொரு பள்ளி நூலகத்திற்கும் ரூ. 15 தான் கொடுக்கப்படுகிறது என்று அறிகிறேன். ரூ. 15 போதாது. மேலும் சிறுவர்களுக்கு வேண்டிய அளவு புத்தகங்கள் இல்லை. சிறுவர்கள் விரும்பிப் படிக்கக்கூடிய, படங்கள் மூலம் பல கலர்களில் விளக்கங்கள் கொண்ட புத்தகங்களை அரசாங்கமே அச்சிட்டு வழங்குவதற்கு முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சிறுவர்களுக்குரிய புத்தகங்கள் தயாரிக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் உத்தேசம். இருக்கிற புத்தகங்களிலே, நூல்நிலையங்களிலே இதுவரையிலே வைக்கப்படாத புத்தகங்கள் ஏதேனும் இருந்தால், கனம் அங்கத்தினர் அவைகளை எழுதி அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது கவனிக்கப்படும். இப்பொழுது ஒரு தொடக்கமாகத்தான் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. லோயர் எலிமெண்டரி ஸ்கூலுக்கு ரூ. 15, ஹையர் எலிமெண்டரி ஸ்கூலுக்கு ரூ. 25, கவர்ன்மெண்டு லோயர் பிரைமரி ஸ்கூலுக்கு ரூ. 30, கவர்ன்மெண்டு அப்பர் பிரைமரி ஸ்கூலுக்கு ரூ. 50, இந்த விகிதாசாரத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.